# முன்னணி கன்னட நடிகர் வீடுகளில் வருமான வரி சோதனை

பெங்களூர், ஜன. 3–

**பெங்களூரில் நடிகர்கள் புனித் ராஜ்குமார், யஷ் வீடுகளில் வருமான வரித்துறை அதிரடி சோதனை நடத்தி வருகிறார்கள்.**

பிரபல நடிகர் ராஜ்குமாரின் மகன் புனித் ராஜ்குமார், சமீபத்தில் வெளியான, 'கேஜிஎப்' திரைப்படம் மூலம் புகழ்பெற்றவர் நடிகர் யஷ். 2 பேரின் வீடுகளிலும் இன்று காலை முதல் 10க்கும் மேற்பட்ட வருமான வரித்துறை அதிகாரிகள் திடீர் நடத்தினர்.

வருமான வரி ஏய்ப்பில் ஈடுபட்டதாக கிடைத்த தகவலையடுத்து இந்த 2 பேரின் வீடுகளிலும் ரெய்டு நடைபெறுகிறது. யஷ் நடிப்பில் பல மொழிகளில், வெளியான கேஜிஎப், ரூ.150 கோடி வருமானம் ஈட்டி மாபெரும் வெற்றி பெற்றுள்ளது. யஷ் சுமார் ரூ.20 லட்சம் அளவுக்கு பழைய கடனை திரும்ப கொடுத்ததாகவும் ஊடகங்களில் செய்தி வெளியானது.

இந்த நிலையில், இன்று காலை முதல் பெங்களூரிலுள்ள இவ்விரு நடிகர்கள் வீடுகளிலும், அவர்களுக்கு சொந்தமான பிற பகுதிகளிலும், வருமான வரித்துறை ரெய்டு நடைபெறுகிறது.

# சபரிமலை விவகாரம்: அவசர வழக்காக எடுக்க சுப்ரீம் கோர்ட் மறுப்பு

புதுடெல்லி, ஜன. 3–

சபரிமலை அய்யப்பன் கோவிலில் அனைத்து வயது பெண்களுக்கும் அனுமதி அளித்து சுப்ரீம் கோர்ட் கடந்த செப்டம்பரில் தீர்ப்பு வழங்கியது.

இந்த நிலையில், கோழிக்கோட்டை சேர்ந்த பிந்து, மலப்புரத்தை சேர்ந்த கனகதுர்கா ஆகிய 2 பெண்கள் நேற்று அதிகாலையில் சபரிமலை அய்யப்பனை தரிசித்தனர். இந்த சம்பவத்தை முதல்வர் பினராயி விஜயனும் உறுதி செய்தார்.

இதனை தொடர்ந்து சபரிமலை அய்யப்பன் கோவிலை மூடி பரிகார பூஜை செய்யப்பட்டது. அதன்பின்பு கோயில் திறக்கப்பட்டது.

இந்த நிலையில், சுப்ரீம் கோர்ட் உத்தரவை மீறி பரிகார பூஜைக்கு ஏற்பாடு செய்த தந்திரி மீது நடவடிக்கை எடுக்க கோரி உச்சநீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் குழு சார்பில் முறையீடு செய்யப்பட்டது. இதனை அவசர வழக்காக விசாரிக்கவும் கோரிக்கை வைக்கப்பட்டது. இந்த நிலையில், விசாரிக்கப்படாமல் உள்ள மற்ற சீராய்வு மனுக்களுடன் சேர்த்தே இந்த வழக்கு விசாரிக்கப்படும் என்றும் அவசர வழக்காக விசாரிக்க முடியாது என்று சுப்ரீம் கோர்ட் தெரிவித்துள்ளது.

## சிறுவன் கடத்தல் : போலீஸ் விசாரணை

காஞ்சீபுரம்,ஜன.3–

செங்கல்பட்டை அடுத்த சேந்தமங்கலம், பொன்னியம்மன் கோவில் தெருவைச் சேர்ந்தவர் குமரபிரசாத், தொழிலாளியான இவர், தனது 5 வயது மகன் குமரகுருவுடன் வல்லக்கோட்டை முருகன் கோவிலுக்குச் சென்றுவிட்டு மீண்டும் சேந்தமங்கலம் செல்லும் வழியில் ஒரகடம் பகுதியில் உள்ள மதுக்கடைக்கு சென்று மது அருந்தியுள்ளார். பிறகு, குமரகுரு வுடன் ஒரகடம் பஜார் பகுதிக்கு வந்த குமரபிரசாத் அளவுக்கு அதிகமாக மது அருந்தியதால் மயங்கிய நிலையில் இருந்துள்ளார். இதனைப் பயன்படுத்திக் கொண்ட மர்ம நபர் ஒருவர் குமரகுருவை கடத்தி சென்றுள்ளார்.

இந்நிலையில், குழந்தை காணாமல் போனது குறித்து தகவல் அறிந்த குமரகுருவின் தாய் முருகம்மாள், இதுகுறித்து ஒரகடம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்பேரில், ஒரகடம் போலீசார் வழக்கு பதிவு செய்து, குமரகுரு நின்று கொண்டிருந்த ஒரகடம் பஜார் பகுதியில் உள்ள கடையின் அருகில் இருந்த கண்காணிப்பு கேமராவில் பதிவான காட்சிகளை ஆய்வு செய்தனர். அதில், மர்ம நபர் ஒருவர் சிறுவன் குமரகுருவுக்கு பால் மற்றும் திண்பண்டங்களை வாங்கிக் கொடுப்பதும், பின்னர் குமரகுருவை தூக்கிச் செல்வதும் தெரியவந்தது. இதையடுத்து, சிறுவனை கடத்திச் சென்ற மர்ம நபரை போலீசார் தேடி வருகின்றனர்.



# ஓமந்தூரார் அரசு மருத்துவமனையில் யோகா–இயற்கை வாழ்வியல் மருத்துவ மையம்: அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் திறந்தார்

சென்னை, ஜன.3–

**சென்னை ஓமந்தூரார் அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் அம்மா முழு உடல் பரிசோதனை மையத்துடன் இணைந்த யோகா மற்றும் இயற்கை வாழ்வியல் மருத்துவ மையம், நவீன எம்.ஆர்.ஐ.,சி.டி ஸ்கேன், காத்திருப்போர் அறை மற்றும் ஒட்டுறுப்பு மற்றும் நுண் அறுவை சிகிச்சை துறையின் பயிற்சி சிகிச்சை மையம் ஆகியவற்றை மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் திறந்து வைத்து பார்வையிட்டார்.**

அப்போது அமைச்சர் விஜயபாஸ்கர் கூறியதாவது:–

அம்மாவின் அரசு இயற்கை மருத்துவத்தை அனைத்து மக்களுக்கும் கொண்டு செல்லும் வகையில் தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையின் மூன்றாம் தளத்தில் யோகா மற்றும் இயற்கை வாழ்வியல் மையம் இயங்கி வருகிறது. தற்போது ஏற்படும் வாழ்க்கை மாற்றத்தினால் ஏற்படக் கூடிய உடல்பருமன், ரத்த அழுத்தம், மூட்டுவலி, தூக்கமின்மை, நீரிழிவு நோய், சைனஸ் தொந்தரவுகள் மற்றும் ஆஸ்துமா போன்ற நோய்களுக்கு யோகா மற்றும் இயற்கை மருத்துவம் பயன் உள்ளதாக உள்ளது. இதன் ஒரு பகுதியாக அம்மா முழுஉடல் பரிசோதனைக்கு வரும் நபர்கள் மற்றும் அவர்களுடன் வரும் உதவியாளர்களும் பயன்படுத்தும் வகையில் இந்த யோகா மற்றும் இயற்கை மருத்துவ வாழ்வியல் மையம் தரைத்தளத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு யோகா மருத்துவம், அங்குபஞ்சர் முறைகள், நறுமண சிகிச்சை, உணவு மருத்துவம், நீர் சிகிச்சை, மண் சிகிச்சை, காந்த சிகிச்சை போன்றவை அளிக்கப்படுகிறது. இதனை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

### காத்திருப்போர் அறை

மேலும் இம்மருத்துவமனையில் ரூ.7.50 லட்சம் மதிப்பில் நவீன எம்.ஆர்.ஐ., சி.டி ஸ்கேன் எடுக்க வரும் நபர்கள் காத்திருப்பதற்காக 40 நபர்கள் வரை அமரும் வகையில் எல்.இ.டி. டி.வி., குடிநீர் வசதி செய்யப்பட்ட அறை அமைக்கப்பட்டுள்ளது.

கை, கால் பயிற்சி, மூளை மற்றும் அறிவு பயிற்சி, கை சுற்றும் சக்கரம், தின செயல் பயிற்சி, கை மற்றும் கண் ஒத்துழைப்பு, வளைய உபகரணங்களுடன் கை, கால்கள் இன்னும் புல உடல்பகுதிகளில் காயம் ஏற்பட்ட பின்பு அவர்களுக்காக அவர்கள் சார்ந்த தொழில் புரிவதற்கான ஓர் செயல்வழி சிகிச்சை, சர்க்கரை நோய் கால் புண் சிகிச்சைக்கு பின்பு அவர்களுக்கு புண்வருவதை தடுக்க பயிற்சி, பிறவி குறைபாடுகளான அன்னபிளவு, உதடுப்பிளவு மற்றும் பிற குறைபாடுகளை அறுவைச் சிகிச்சைக்கு பின்பு அவர்களுக்கான உணவு உட்கொள்ளும் பயிற்சிகள், தீக்காயச் சிகிச்சைக்குப் பின்பு ஏற்படும் உடல் சுருக்கத்திற்கான அறுவைச் சிகிச்சைக்கு பின்பு அவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சி மருத்துவம், புற நரம்புகள் காயத்திற்குப் பின்பு தசை மறு பயிற்சி அளிப்பதற்காக ஒட்டுறுப்பு மற்றும் நுண் அறுவை சிகிச்சை துறையின் பயிற்சி சிகிச்சை மையம் துவக்கப்பட்டுள்ளது என்றார்.

இந்நிகழ்ச்சிகளில் இந்திய மருத்துவம் மற்றம் ஓமியோபதி துறை ஆணையர் டாக்டர் பீலா ராஜேஷ், ஓமந்தூரார் அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் நாராயணபாபு, மருத்துவமனை நிலைய அலுவலர் டாக்டர் ஆனந்தபாபு மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# பொதுமக்களிடம் இருந்து 3 நாளில் 12½ டன் பிளாஸ்டிக் பொருட்கள் பெறப்பட்டது

## சென்னை மாநகராட்சி கமிஷனர் தகவல்

சென்னை, ஜன.3

**சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட 15 மண்டலங்களில் கடந்த 3 நாட்களில் ஒருமுறை பயன்படுத்தப்பட்டு தூக்கி எறியப்படும் சுமார் 12.48 டன் பிளாஸ்டிக் பொருட்கள் பெறப்பட்டுள்ளது என கமிஷனர் தா.கார்த்திகேயன் தெரிவித்துள்ளார்.**

தமிழகத்தில் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் விதத்தில் முதலமைச்சர் சட்டமன்றத்தில் விதி எண் 110ன் கீழ் கடந்த 1–ந்தேதி அன்று முதல் தமிழ்நாடு முழுவதும் ஒருமுறை பயன்படுத்தப்பட்டு தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்கள் முற்றிலும் தடை செய்யப்படுவதாக அறிவித்திருந்தார்.

இதனைத்தொடர்ந்து, பொதுமக்கள் தங்களது வீடு, அலுவலகம், தொழிற்கூடங்கள், வியாபார நிறுவனங்கள் மற்றும் உணவு விடுதிகளில் உள்ள தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை தங்களது பகுதிக்கு உட்பட்ட வார்டு அலுவலகங்களில் கடந்த 31–ந்தேதி அன்றுக்குள் ஒப்படைக்குமாறு சென்னை மாநகராட்சியால் கேட்டுக் கொள்ளப்பட்டது. அதனடிப்படையில் சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட 15 மண்டலங்களிலும் ஒருமுறை பயன்படுத்தப்பட்டு தூக்கி எறியப்படும் சுமார் 1.88 டன் பிளாஸ்டிக் பொருட்கள் 31–ந்தேதி அன்று பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன.

மேலும், 1–ந்தேதி அன்று 2.25 டன் அளவிலும், 2–ந்தேதி அன்று 8.35 டன் என மொத்தம் கடந்த 3 நாட்களில் 12.48 டன் அளவிலான தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டும், மாநகராட்சி அலுவலர்களால் பறிமுதல் செய்யப்பட்டும் உள்ளது.

தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை சார்பாக 15 மண்டலங்களிலும் பிளாஸ்டிக் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு முகாம்கள் சென்னை மாநகர் முழுவதும் நடத்தப்பட்டு வருகிறது.

தமிழக அரசால் தடை செய்யப்பட்டுள்ள 14 வகை பிளாஸ்டிக் பொருட்களை சேமித்து வைத்தாலோ, விற்பனை செய்தாலோ, உபயோகப்படுத்தினாலோ பறிமுதல் செய்யப்பட்டு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே, பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை சம்பந்தப்பட்ட அலுவலகங்களில் ஒப்படைத்து பிளாஸ்டிக் மாசில்லா சென்னையை உருவாக்க தங்களது முழு ஒத்துழைப்பை அளிக்க வேண்டும்.

இவ்வாறு கமிஷனர் தா.கார்த்திகேயன் கேட்டுக் கொண்டுள்ளார்.

### கடை, கடையாக அதிகாரிகள் சோதனை

அண்ணாநகர் மண்டலத்தில் மத்திய வட்டார மேற்பார்வை பொறியாளர் எம்.முருகன் தலைமையில் மாநகராட்சி மண்டல அதிகாரி ஆ.பரந்தாமன், பொறியாளர்கள் கே.சுந்தரராஜன், செந்தில்குமார், கலையரசன் உள்பட அதிகாரிகள் உணவகங்கள், ஜவுளி–மளிகை கடைகள் என அனைத்து இடங்களிலும் தீவிர சோதனை நடத்தினர். இதேபோல உதவி செயற்பொறியாளர் கே.சுரேஷ்பாபு தலைமையில் அபித், சீனிவாசன் உள்பட அதிகாரிகள் தி.நகர் முழுவதும் வீதி வீதியாக சோதனை நடத்தினர். அப்போது ஜவுளி கடைகள், உணவகங்களில் பயன்படுத்தப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை அதிகாரிகள் கைப்பற்றினர்.

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டிலும் பிளாஸ்டிக் ஒழிப்பு நடவடிக்கை தீவிரமாக்கப்பட்டது. பூ, காய்கறி மற்றும் பழ சந்தைகளில் ஏராளமான கடைகளில் இருந்த பிளாஸ்டிக் பொருட்களை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

# மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைக்கு பிரதமர் நரேந்திர மோடி 27ந் தேதி அடிக்கல் நாட்டுகிறார்

மதுரை, ஜன.3

**மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைக்கு வருகிற 27ந் தேதி அடிக்கல் நாட்டும் பிரதமர் நரேந்திர மோடி, அன்றைய தினம் மதுரை–சென்னை இடையே அதிநவீன தேஜஸ் ரெயில் போக்குவரத்தையும் தொடங்கி வைக்கிறார்.**

மதுரை தோப்பூரில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைப்பதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்தது. ரூ.1,258 கோடியில், அனைத்து வசதிகளுடன் பிரமாண்டமாக அமையும் இந்த மருத்துவமனையின் அடிக்கல் நாட்டு விழா எப்போது நடைபெறும் என தென்மாவட்ட மக்கள் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

இந்த நிலையில் வருகிற 27ந்தேதி (ஞாயிற்றுக்கிழமை) பிரதமர் நரேந்திர மோடி, மதுரை வருவதாக தெரிகிறது. அன்றைய தினம் அவர், எய்ம்ஸ் மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டி, பணிகளை தொடங்கி வைக்க இருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும் அதிநவீன, முற்றிலும் குளிரூட்டப்பட்ட தேஜஸ் சொகுசு ரெயில் மதுரை– சென்னை இடையே இயக்கப்பட உள்ளதாக கடந்த மாதம் அறிவிக்கப்பட்டது. 27 ந் தேதி நடைபெறும் விழாவில் தேஜஸ் ரெயில் போக்குவரத்தையும் பிரதமர் தொடங்கி வைக்க இருப்பதாக ரெயில்வே வட்டாரங்கள் தெரிவித்தன.

# கட்சி தலைவர்கள் பயண செலவு வேட்பாளர் கணக்கில் வராது

## தேர்தல் கமிஷன் அறிவிப்பு

சென்னை, ஜன.3

**கட்சி தலைவர்கள் பயண செலவு வேட்பாளர் கணக்கில் வராது என்று தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது.**

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:

மக்கள் பிரதிநிதித்துவ சட்டம், 1951, பிரிவு 77ல் செய்யப்பட்ட வழிவகைகளின்படி, அரசியல் கட்சி தலைவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்யும்போது, விமானம் உள்ளிட்ட போக்குவரத்து செலவுகள் கட்சியின் வேட்பாளர் மற்றும் முகவர்கள் கணக்கில் சேராது. இந்த சலுகையை பெற, பிரச்சாரம் செய்யும் தலைவர்களின் பட்டியலை தேர்தல் ஆணையத்திடம் அளிக்க வேண்டும்.

திருவாரூர் சட்டமன்ற தொகுதிக்கான இடைத்தேர்தல் அறிவிக்கை 3ந் தேதி (இன்று) வெளியிடப்பட உள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சென்னையில் உள்ள கேரள விருந்தினர் இல்ல கண்ணாடிகள் உடைப்பு

## இந்து முன்னணியைச் சேர்ந்தவர் கைது

சென்னை, ஜன. 3–

**சென்னையில் உள்ள கேரள விருந்தினர் இல்லம் மீது தாக்குதல் நடத்திய இந்து முன்னணி தலைவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.**

சென்னை ஆயிரம் விளக்கு கிரீம்ஸ் சாலையில் உள்ள கேரள விருந்தினர் இல்லத்தின் ஒரு பகுதியில் ஓட்டல் செயல்படுகிறது. இந்த ஓட்டலுக்கு நேற்று இரவு வந்த ஒரு கும்பல், திடீரென கற்களை வீசியும் உருட்டுக்கட்டையால் தாக்கியும் கண்ணாடியை உடைத்தனர். இந்த சம்பவம் காரணமாக அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

இந்த தாக்குதல் தொடர்பாக ஆயிரம் விளக்கு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். மேலும், அங்குள்ள சிசிடிவி கேமராவில் பதிவான காட்சிகளை ஆய்வு செய்து, குற்றவாளிகளை பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

சபரிமலையில் பெண்களை தரிசனம் செய்ய அனுமதித்ததைக் கண்டித்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டிருக்க லாம் என தெரிகிறது. இந்த தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து கேரள சுற்றுலா அலுவலகத்திற்கு போலீஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கேரள விருந்தினர் இல்லம் கல்வீசி தாக்கப்பட்டது தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணையில் அவர் ஆயிரம் விளக்கு பகுதி இந்து முன்னணி தலைவர் பார்த்தசாரதி என்பது தெரிய வந்துள்ளது.



**திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியில் உள்ள பல்பொருள் அங்காடிகள் சினிமா திரையரங்கம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் கோட்டாட்சியர் நந்தகுமார், தாசில்தார் புகழேந்தி பொன்னேரி செயல் அலுவலர் பாஸ்கர் கொண்ட அதிகாரிகள் குழு திடீரென ஆய்வு செய்து 1000 கிலோ மதிப்புள்ள ஒரு முறை பயன்படுத்தக் கூடிய பிளாஸ்டிக் பைகளை பறிமுதல் செய்து பத்தாயிரம் ரூபாய் அபராதம் விதித்தனர். இந்த ஆய்வின்போது மண்டல துணை வட்டாட்சியர்கள் அருள் வளவன்,பாலாஜி, பொன்னேரி வருவாய் ஆய்வாளர் பாரதி ஆகியோர் உடனிருந்தனர்.**


**EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்**

பதிவு அலுவலகம்: 1/24, ஜி.எஸ்.டி ரோடு, மீனம்பாக்கம், சென்னை–600027.
CIN: L92490TN1983PLC009903
Website: www.eihassociatedhotels.in
Phone: 91-44-22344747,
Fax: 91-44-22346699

**அறிவிப்பு**

செக்யூரிடீஸ் அண்ட் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015ன் விதி 29 மற்றும் 47ன்படி, இதர அலுவல்களுக்கு இடையே 31 டிசம்பர், 2018ல் முடிந்த காலாண்டு/ ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து, ஒப்புதல் அளித்து, பதிவு செய்ய கம்பெனி இயக்குனர்கள் குழுவின் கூட்டம் வியாழக்கிழமை, 31 ஜனவரி 2019 அன்று நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இந்த அறிவிப்பு கம்பெனியின் இணையதளம் www.eihassociatedhotels.in மற்றும் ஸ்டாக் எச்சேஞ்சுகளின் இணைய தளங்கள் www.bseindia.com மற்றும் www.nseindia.comலும் உள்ளது.

EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்டுக்காக
இந்த்ராணி ரே
கம்பெனி செயலாளர்

இடம்: கொல்கத்தா
தேதி: 3 ஜனவரி 2019



**XII ASST IN THE CITY CIVIL COURT AT CHENNAI**
**O.S.No.2082 of 2018**

Canara Bank,
Egmore Branch, Chennai-8,
Rep. by its Senior Manager. .. Plaintiff.

-Vs-

Mr.A.Suganandakumar and 3 others. .. Defendants

To
Mr.L.Baskar .. 3rd Defendant
S/o.Mr.G.Lakshmanan,
MIG-278, 10th Main Road,
Nolambur, Mogappair West,
Chennai-600 037.
And also working as
Asst.Grade II(D) in Food Corporation of India,
Divisional Office, Chennai,
No.2, Sathyamoorthy Salai,
Chetpet, Chennai-600 031.

The above suit is filed against the defendants herein to recover a sum of Rs.6,37,570-54 with costs and further interest. Wherein, the Hon'ble Court was pleased to order substituted service for your appearance returnable by 24.01.2019. Therefore, kindly take notice that you should appear either in person or through your lawyer on the said date at 10.30 a.m. before the said court, failing which the matter will be heard and decided in your absence.

**S.KESAVAN**
COUNSEL FOR PLAINTIFF



**FORM G**
**INVITATION FOR EXPRESSION OF INTEREST**
(Under Regulation 36A (1) of the Insolvency and Bankruptcy
(Insolvency Resolution Process for Corporate Persons) Regulations, 2016

**RELEVANT PARTICULARS**

| | | |
|---|---|---|
| 1. | Name of the corporate debtor | **SOUTH INDIAN MINT AND AROMATIC PRODUCTS LIMITED** |
| 2. | Date of incorporation of corporate debtor | 05/06/2008 |
| 3. | Authority under which corporate debtor is incorporated / registered | RoC-Pondicherry |
| 4. | Corporate identity number / limited liability identification number of corporate debtor | U55101PY2008PLC002178 |
| 5. | Address of the registered office and principal office (if any) of corporate debtor | 14 Vanidasan Street Kamaraj Nagar Pondicherry 605011 |
| 6. | Insolvency commencement date of the corporate debtor | 04/06/2018 |
| 7. | Date of invitation of expression of interest | 03/01/2019 |
| 8. | Eligibility for resolution applicants under section 25(2)(h) of the Code is available at: | Detailed EOI document containing eligibility criteria for resolution applicants as approved by COC at its meeting held on 16/10/2018 under section 25(2)(h) of IBC,2016 can be downloaded /obtained from the following website: **www.cirpindia.com** |
| 9. | Norms of ineligibility applicable under section 29A are available at: | Available on the website of **IBBI:http://ibbi.gov.in/webfront/legal_framework.php** Will also be given as Annexure E in the Eligibility criteria of EOI in **www.cirpindia.com** |
| 10. | Last date for receipt of expression of interest | 18/01/2019 |
| 11. | Date of issue of provisional list of prospective resolution applicants | 28/01/2019 |
| 12. | Last date for submission of objections to provisional list | 02/02/2019 |
| 13. | Date of issue of final list of prospective resolution applicants | 07/02/2019 |
| 14. | Date of issue of information memorandum, evaluation matrix and request for resolution plans to prospective resolution applicants | 02/02/2019 |
| 15. | Manner of obtaining request for resolution plan, evaluation matrix, information memorandum and further information | Resolution applicants may approach Resolution Professional for evaluation matrix, information memorandum at the address/e-mail/mobile number as provided under serial no.21. The same shall be provided after submission of confidential undertaking by resolution applicants. |
| 16. | Last date for submission of resolution plans | 17/02/2019 |
| 17. | Manner of submitting resolution plans to resolution professional | The resolution applicants are first required to submit their Expression of Interest along with documents in support of their eligibility criteria, via email to **fcs.rms@gmail.com** The format of EOI can be obtained from **www.cirpindia.com.** The EOI may also be submitted by way of post / courier addressed to:C.Ramasubramaniam, Resolution professional in the matter of South Indian Mint And Aromatic Products Limited 'RAJI' 3B1, 3rd Floor, Gaiety Palace, No.1L, Blackers Road, Mount Road, Chennai-600002<br><br>The resolution applicants shortlisted by RP, after considering their EOI, shall submit Resolution Plans to Resolution Professional through email and physically/by post in sealed envelope at the address, mentioned above. |
| 18. | Estimated date for submission of resolution plan to the Adjudicating Authority for approval | 22/02/2019 |
| 19. | Name and registration number of the resolution professional | C.RAMASUBRAMANIAM<br>IBBI/IPA-002/IP-N00052/2016-17/10096 |
| 20. | Name, Address and e-email of the resolution professional, as registered with the Board | C.RAMASUBRAMANIAM<br>'RAJI' 3B1,3rd Floor, Gaiety Palace, No.1L, Blackers Road, Mount Road, Chennai-600002, **fcs.rms@gmail.com** |
| 21. | Address and email to be used for correspondence with the resolution professional | C.RAMASUBRAMANIAM<br>'RAJI' 3B1,3rd Floor, Gaiety Palace, No.1L, Blackers Road, Mount Road, Chennai-600002, **fcs.rms@gmail.com** |
| 22. | Further Details are available at or with | C.RAMASUBRAMANIAM, Resolution Professional ,<br>Weblink : **www.cirpindia.com,** Email : **fcs.rms@gmail.com** |
| 23. | Date of publication of Form G | 03/01/2019 |

**C.RAMASUBRAMANIAM,**
**Resolution Professional**
In the matter of South Indian Mint And Aromatic Products Limited
**IBBI/IPA-002/IP-N00052/2016-17/10096**
3B1, 3rd Floor Gaiety Palace No.1L, Blackers Road, Mount Road, Chennai-600002
**fcs.rms@gmail.com**

**Date : 03.01.2019**
**Place: Chennai**